கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14.09.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இணையவழி கலப்புக்கல்வி அறிமுகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இணையவழி கலப்புக் கல்வி திட்டம் 13.09.2023 அன்று நடைபெற்ற கல்விசார் மேலாண்மை அமைப்பு கருத்தரங்கில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் வழிகாட்டுதலின்படி ஒரு குறிப்பிட்ட பாடத்தினை குறிப்பிட்ட நேரத்தில் பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கள் ஒரே குடையின் கீழ் கற்பிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இக்கருத்தரங்கினை வேளாண் பல்கலைக்கழக முதுகலை முதன்மையர் முனைவர் ந.செந்தில் அவர்கள் வரவேற்றார்கள். இத்திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர்.வெ.கீதாலட்சுமி அவர்களால் விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்களின் முன்னிலையில் அறிமுகம் செய்யப்பட்டது. துணைவேந்தர் அவர்களின் உரையில் இத்திட்டம் இளங்கலை, முதுநிலை மற்றும் முனைவர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும், இத்திட்டம் இணையவழி கல்வியை அளிக்கும் மோக், ஸ்வாயம், நெப்டெல் போன்றவற்றிற்கு மாற்றாக விளங்கிடும் என்று கூறினார்கள். முதற்கட்டமாக வேளாண்மை மற்றும் தோட்டக்கலை இளங்கலையில் நான்கு பாடங்களில் இந்தியளவில் முன்னோடியாக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் முதுகலை மற்றும் முனைவர் பட்டைய பாடங்களில் சுமார் 10 சதவீத வரை இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.

முனைவர் ஆர்.சி.கோயல், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், புதுதில்லி அவர்கள் இந்திட்டத்தின் முக்கியத்துவத்தையும் பயன்களையும் எடுத்துரைத்தார்கள். இக்கருத்தரங்கிற்கான சிறப்புரை இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக இயக்குநர் முனைவர் இராஜேந்திர பிரசாத் மற்றும் திட்ட இயக்குநர் முனைவர் சந்தீப் மார்வாக அவர்களால் வழங்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் ஐம்பதுக்கு மேற்பட்ட பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். 250-ம் மேற்பட்ட மாணவர்கள் நேரிடையாகவும் 500-ம் மேற்பட்ட மாணவர்கள் இணையவழியாகவும் பயன்பெற்றனர். இத்திட்டங்களின் செயல் விளக்கங்கள் திரு.மணிஸ் மற்றும் உத்கர்ஸ் அவர்களால் செய்து காண்பிக்கப்பட்டது. இறுதியாக இளங்கலை வேளாண்மை முதன்மையர் முனைவர்.என். வெங்கடேச பழனிச்சாமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**